ஆண்டு காலவரை நீடிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கல்வித்துறையிலே பயிற்றுவிக்கின்ற துறையிலே இருக்கின்றவர்களுக்கு 58 ஆண்டு என்றும், நிர்வாகத் துறையிலே இருக்கிறவர்களுக்கு, அதாவது நான்-டெக்னிகல் ஸ்டாஃபுக்கு 55 வயது என்றும் இருக்கிறது. அந்த முறைதான் தொடர்ந்து நடைபெறுகிறது. கல்வித் துறையிலே பயிற்றுவிக்கின்ற துறையைச் சேர்ந்தவர்களின் ஓய்வுபெறும் காலம் கல்வி ஆண்டின் இடையிலே வருமானல் அந்தக் கல்வி ஆண்டு முடிகிறவரை அவர்களுக்கு நீட்டிப்புக் கொடுக்கப்படுகிறது. வேறு எந்த வகையிலும் கொடுக்கப்படுவதில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன் அவர்களுடைய ஓய்வு பெறும் காலத்தை நீட்டிப்பதற்கு அரசினர் கொடுக்கவில்லை. ஏற்கெனவே இருந்த துறையிலே அவர்கள் இருந்திருந்தால் 60 ஆண்டுகள் பணியாற்றி இருக்கலாம். இப்போது இடையிலே நீட்டிப்புக் கொடுக்கவில்லை என்பதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறர்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. ஆலடி அருணு : கல்வித் துறையில் பயிற்றுவிக்கின்ற துறையிலே உள்ளவர்களுக்கு 58 வயதும், நிர்வாகத்துறையிலே இருப்பவர்களுக்கு 55 வயதும் இருப்பதால், பயிற்றுவிக்கின்ற துறையிலே உள்ளவர்கள் நிர்வாகத் துறைக்கு வர விரும்பாமல் இருக்கிறர்கள். இந்தப் பாகுபாட்டைப் போக்கப் பயிற்றுவிக்கின்ற துறையிலே இருக்கின்றவர்களுக்கும், நிர்வாகத் துறையிலே இருக்கின்றவர்களுக்கும் ஒரே வகையான வயதை நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முன்பு இரண்டு துறைக்கும் ஒரே மாதிரியாகத்தான் வயது நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது பயிற்றுவிக்கின்ற துறையிலே இருக்கின்றவர்களுக்கு 58 வயது என்றும் நிர்வாகத்துறையிலே இருப்பவர்களுக்கு 55 வயது என்றும் ஆக்கப்பட்டிருக்கிறது நிர்வாகத் துறையிலே ஈடுபட்டிருந்த அநேகம் பேர்கள் பயிற்றுவிக்கின்ற துறைக்குத் தாங்களே மாற்றிக்கொண்டுவிட்டார்கள்.

மனை இயல் படித்த ஆசிரியைகள்

*** 230 வினு.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மனை இயல் **B. T.** படித்த ஆசிரியைகள் விஞ்ஞான பாடம் சொல்லிக்கொடுக்கத் தகுதியற்றவர்கள் என்னும்

1969 செப்டம்பர் 12]

சுற்றறிக்கை ஏதேனும் கடந்த 1968 ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில் தமிழக அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பியிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்கு இந்த விதமான சுற்றறிக்கை அனுப்பப்பட்டதா ? அதன் காரணமாக சைன்ஸ் பாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியை தன்னுடைய பதவியை இழந்ததாகக் கூறப்படுவது உண்மையா ? இதுபற்றிய விவரம் அறியலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்றுதான் பதில் சொன்னார்களே.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மனை இயல் பி.டி. படித்த ஆசிரியர்கள் விஞ்ஞான பாடம் சொல்லிக்கொடுக்கத் தகுதியற்றவர்கள் என்ற சுற்றறிக்கை விடப்பட்டதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டார்கள். இல்லை என்று பதில் சொன்னேன். இப்பொழுது இருக்கிற விதிப்படி பி.டி. பட்டம் பெற்றவர்கள் எந்தத் துறையிலே அவர்கள் பாடம் கற்றார்களோ, அந்தத் துறையிலே தான் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். மனை இயல் துறையிலே பி.டி. படித்தவர்கள் பொது விஞ்ஞானத் துறையிலே பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள். 1969 பிப்ரவரி திங்களில் 11—1—1970-க்குள் மனை இயல் பட்டம் பெற்றவர்கள் பொது விஞ்ஞானம் சொல்லிக்கொடுக்கலாம் என்ற உத்திரவு போடப்பட்டிருக்கிறது. இதுவும் மனை இயல் பாடம் பெற்றவர்களுக்குச் சாதகமான உத்தரவுதான்.

பள்ளித் துணை ஆய்வாளர்களின் அலுவலகங்கள்

***231 வினா.—திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்தில் பள்ளித் துணை ஆய்வாளர்களின் அலுவலகங்கள் எல்லா வட்டாரத் தலைமையிடங்களிலும் அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பள்ளித் துணை ஆய்வாளர்களின் அலுவலகங்கள் அந்தந்த வட்டாரத் தலைமையிடங்களில் இல்லாத காரணத்தினால், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் 'கேர்' பொருளை வாங்குவதற்குச் செலவு அதிகம் ஆகிறது. இரண்டு, மூன்று சரகங்களுக்கும் சேர்ந்து டெபுடி இன்ஸ்பெக்டர் இருக்கிற காரணத்தினால், ஆங்காங்கு போய் இன்ஸ்பெக்ட் பண்ணுவதற்கு செலவு அதிகம் ஏற்படுகிறது. எனவே, அந்தந்த வட்டாரத்திலே